Publication: Tamil Murasu, p3
Date: 12 November 2016
Headline: 1 in 4 Singaporeans develops chronic conditions



# நான்கில் ஒரு சிங்கப்பூரருக்கு நாட்பட்ட நோய்: ஆய்வு

கடந்த ஓர் ஆண்டில் 65 வயதுக்கும் அதிகமான சிங்கப்பூரர்களில் நான்கில் ஒருவர் நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக முதிய சிங்கப்பூரர்கள் பற்றியும் அவர்களது நிதி நிலை பற்றியும் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

உயர் ரத்த அழுத்தம் போன்ற சிறுசிறு அதிர்ச்சிகளைத் தரும் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கான சுகாதாரச் செலவு தொடர்ந்து நிலையாக இருக்கிறது.

ஆனால் புற்றுநோய், பக்கவாதம் போன்ற பெரும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் சுகாதாரச் செலவு பன்மடங்கு உயர்ந்து பல மாதங்கள் ஆகியும் தொடர்ந்தது.

மூப்படைந்து வரும் சிங்கப்பூரர்கள் பெரும் நோய்களால் பாதிப்படையும் சாத்தியம் அதிகம் உள்ளது என்றும் இதனால் நீண்ட கால செலவுகள் ஏற்படும் என்றும் மூத்த ஆய்வாளரான பேராசிரியர் ரீமா வைத்தியநாதன் தெரிவித்தார்.

ஓய்வுகாலத்துக்கும் மூப்படைதலுக்கும் சிங்கப்பூரர்கள் எந்த அளவுக்கு தயாராக உள்ளனர் என்பதைக் கண்டறிய கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அமைக்கப்பட்ட சிங்கப்பூர் லைஃப் குழுவின் முக்கியத்துவத்தை இந்த ஆய்வு சுட்டிக் காட்டியது.

2030ஆம் ஆண்டுக்குள் நான்கில் ஒரு சிங்கப்பூரர் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருப்பார்.

தற்போது எட்டில் ஒரு சிங்கப்பூரர் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

"மூப்படையும் மக்கட்தொகை மோசமான நிலையைத்தான் உருவாக்கும் என்பது இல்லை. வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு நாம் அனைவரும் நோயுடன் பல ஆண்டுகள் முடங்கிக் கிடந்தால்தான் அது மோசமான நிலையாக மாறும்," என்று சுகாதார மூத்த துணை அமைச்சர் டாக்டர் ஏமி கோர் நேற்று குறிப்பிட்டார்.

சிங்கப்பூரர்கள் ஆரோக்கியமாக நீண்ட நாட்கள் வாழ்வதாக அவர் கூறினார்.

1990ஆம் ஆண்டில் சிங்கப்பூர் ஆண்கள் சராசரியாக 65.8 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்தனர். இது கடந்த ஆண்டு 72.3 வயதுக்கு உயர்ந்தது.

1990ஆம் ஆண்டு பெண்கள் சராசரியாக 69 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்தனர். இது கடந்த ஆண்டு 75 வயதுக்கு உயர்ந்தது.

மூப்படையும் சிங்கப்பூரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிட அரசாங்கம் விரும்புவதாக டாக்டர் கோர் கூறினார்.

மூப்படையும்போது ஏற்படும் சுகாதாரச் செலவுகளுக்கு சிங்கப்பூரர்கள் தயாராக இருக்கின்றனரா என்பதைக் கண்டறிய ஆய்வு நடத்தப்படுகிறது.

ஆய்வின் கண்டுபிடிப்புகளைக் கொண்டு அரசாங்கத்திடம் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும். ஆய்வுக்கு கல்வி அமைச்சு 10 மில்லியன் வெள்ளி நிதியுதவி வழங்கி உள்ளது.